7th December 1961]

Backward areas

*2128 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 14-ம் தேதி 811-ம் எண் கேள்விக்குக் கொடுத்த பதிலையொட்டி நமது ராஜ்யத்தில் ஜில்லா வாரியாக பிற்பட்ட பகுதிகள் யாவை ?

(இ) எந்த அடிப்படையில் பிற்பட்ட பகுதிகள் என்று நிர்ணயிக்கப்பட்டது ?

(உ) பிற்பட்ட பகுதிகளை முற்பட்ட பகுதியாக மாற்றுவதற்காக சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) to (உ) There has been no classification of areas in the State as backward areas. However, there are certain areas in districts which are comparatively less developed than other areas. The needs of these areas have been taken into account while preparing the Third Five Year Plan of the State.

*2129 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 14-ந் தேதி நட்சத்திரக் குறியிட்டக் கேள்வி எண் 811-க்கு அளித்த பதிலையொட்டி எந்தெந்த பகுதிகள் பிற்பட்ட பகுதிகள் என்று சர்க்கார் முடிவு செய்துள்ளனர் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The attention of the hon. Member is invited to the answer to the Legislative Assembly Question No. 2128.

SRI K. ANBAZHAGAN : ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மக்களுடைய சராசரி வருமானத்தைப் பொறுத்து ஏறத்தாழ ஒரே நிலையில் இருக்கும் அளவுக்கு தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று சொன்னால், ஒவ்வொரு மாவட்டத்தினுடைய சராசரி வருமானத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, பிற்பட்ட பகுதியை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு ராஜ்யத்தின் அளவிலேதான் இப்பொழுது இந்த சராசரி வருமானம் இன்றைக்கு நிர்ணயிப்பதற்கான ஒரு முறையை மிகவும் கஷ்டப்பட்டு ஏற்படுத்தியிருக்கிறோம். ஜில்லா வாரியாக அதை நிர்ணயிப்பது என்பது முடியாத காரியம். ஆனால் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று சொல்லும்போது, பிற்போக்கான இடத்திலே தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று சொன்னால், அதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. சர்க்கார் சில தூண்டுதல்களைக் கொடுத்து பிற்போக்காக இருக்கப்படும் பகுதிகளிலே சில தொழில்களை ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள்.